

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 289 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 17 – ஞாயிற்றுக்கிழமை 31 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 289 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 17 - Sunday 31 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த முயற்சிகளும் –

# ‘ரீல்ஸ்’ மூலம் த.வெ.க. அமைச்சர் முதலீட்டாளர்களை அழைக்கும் அவலமும்!

## ‘அமைச்சரா? சினிமா விளம்பர நடிகையா? கேலிக் கூத்தின் உச்சம்’ என மக்கள் வேதனை!

**சென்னை, மே 31–**

**‘தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த முயற்சிகளும் ‘ரீல்ஸ்’ மூலம் த.வெ.க. அமைச்சர் முதலீட்டாளர்களை அழைக்கும் அவலமும் நடைபெறுகிறது’ எனவும் ‘அமைச்சரா? சினிமா விளம்பர நடிகையா? கேலிக் கூத்தின் உச்சம்’ எனவும் மக்கள் வேதனை அடைந்துள்ளனர்.**

த.வெ.க. ஆட்சி ரீல்ஸ் ஆட்சி என விமர்சனம் எழுந்தும் திருந்தவில்லை.. முதலீட்டாளர்களுக்கு ரீல்ஸ் மூலம் அழைப்பு விடுத்த தவெக அமைச்சர்: திருந்த மாட்டாங்கய்யா... திருந்தவே மாட்டாங்க..

முதலீட்டாளர்களுக்கு ரீல்ஸ் மூலம் அழைப்பு விடுத்த தொழில் துறை அமைச்சரின் செயல் கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. பிளாட் விற்கும் நிறுவனங்களுக்கு விளம்பர நடிகை போல் பேசுவதாக நெட்டிசன்கள் வறுத்தெடுத்து வருவது தமிழ்நாட்டு அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய 18 முதல் 25 வயது வரையிலான இளைஞர்கள், மற்ற தலைமுறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் செய்தித்தாள்களைப் படிப்பதில்லை, தொலைக்காட்சி செய்திகளைப் பார்ப்பதில்லை.

### நடப்பு விவரங்களை அறியாத த.வெ.க.வினர்!

வாசிப்புப் பழக்கம் அறவே கிடையாது. இவர்களுக்கான உலகம் ஸ்மார்ட்போன்களுக்குள் மட்டுமே சுருங்கியுள்ளது. குறிப்பாக, இன்ஸ்டாகிராம் என்பது இவர்களைப் பொறுத்தவரை தனி உலகம். இந்த உலகத்தில் இருப்பவர்களுக்கு எழுத்து வடிவிலான செய்திகளை விட காட்சி வாயிலான செய்திகளே அதிகம் பிடிக்கிறது. அதிலும் இந்தியாவில் டிக்டாக் தடை செய்யப்பட்டு, இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் கலாச்சாரம் தலையெடுத்தப் பிறகு இது வேறு ஒரு பரிணாமத்தை அடைந்தது.

இதை பயன்படுத்தியே விஜய்யின் தமிழக வெற்றி கழகம் ஆட்சியை பிடித்தது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. சினிமாவில் விஜய் பேசும் பஞ்ச் டயாலாக்குகளை போன்று அவரது மேடை பேச்சும் இருந்ததால் அதை ரீல்ஸ் ஆக




வெளியிட்டே மாற்றத்தை ஏற்படுத்தி விட்டனர் இன்றைய இளசுகள் என்றும் விவாதங்கள் எழுந்துள்ளது. இளைஞர்களின் ரீல்ஸ் மோகம் ஒருபுறம் இருந்தாலும், அவர்களால் ஆட்சிக்கு வந்த தவெகவினர் நடத்தும் அலப்பறைகள் தமிழ்நாட்டில் சந்தி சிரிக்கும் வகையில் உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது.

### இன்ஸ்டா ரீல்ஸ்கள் வெளியிடுவதில் சாதனை!

விஜய் முதல்வராக பதவி ஏற்றதிலிருந்து முதல்வரின் அறை உள்பட அரசு அலுவலகங்களும், பொதுமக்கள் கூடும் இடங்களும் படப்பிடிப்பு தளங்களாகவே மாறி வருவதாகப் பொதுமக்களே குற்றம் சாட்டுகின்றனர். ஆளும் கட்சியினர் மற்றும் ரசிகர்கள் என்ற போர்வையில் முதல்வர் அறையில் நடக்கும் விவாதங்களும், முதல்வரின் புகழ் பாடுவதற்காகப் பொதுமக்களுக்கு இடையூறு செய்து இன்ஸ்டா ரீல்ஸ்களாக எடுத்து வெளியிடுவதே தவெக அரசின் சாதனையாகவும் டிரெண்டாகவும் மாறியுள்ளது.

இதனால் தான் தவெக அரசு பொறுப்பேற்று 3 வாரங்கள் ஆகியும் ஒன்றும் நடக்கவில்லை என்ற விமர்சனங்களும் ரீல்ஸ்களாக அனல் பறக்கிறது. எனவே தான், சட்டப் பேரவையில் நடைபெற்ற முதல்வர் விஜய் தலைமையிலான அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி, “ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் மக்களுக்கான ஆட்சியை முதல்வர் நடத்த வேண்டும்” என விமர்சித்து இருந்தார்.

### தி.மு.க. ஆட்சியில் தொழில்துறை வளர்ச்சி!

மேலும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் “சமூக வலைதளங்கள் மற்றும் இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி, சிறுபிள்ளைகள் மூலமாக அவர்களின் பெற்றோர்களிடமும் பெரியவர்களிடமும் திட்டமிட்டுப் பிரசாரம் செய்ய வைத்து, ஆட்சிக்கு வந்துள்ளனர். இது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது” என்றும் அவர் ஓபனாகப் பேசினார். இப்படிப்பட்ட சூழ்நிலையில், தொழில்துறையில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் அரசின் கொள்கைகள் குறித்து தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா கோட் அணிந்து கொண்டு ரீல்ஸ் வெளியிட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள விவகாரம் தொடர்பாக சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் குவிந்து வருகின்றன.

> **ஏதோ பிளாட் விற்கிற நிறுவனங்களுக்கு ஒரு விளம்பர மாடல் பேசுவது போல் பேசுகிறார் அமைச்சர். நடிகர் விஜய் அமைச்சரவை எந்த அளவுக்கு கேவலமாக மாறி வருகிறது என்பதற்கு இந்த வீடியோ ஒரு உதாரணம்..**

அதற்கு காரணம், கடந்த திமுக ஆட்சியில் தொழில் துறை வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பாக அவ்வப்போது தொழில் துறையினருடன் கலந்துரையாடல் நடத்தப்படும். இதில் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து அழைப்பு விடுக்கப்படும். சந்தேகங்கள் இருந்தால் முதலீட்டாளர்கள் நேரடியாக தங்களுக்கான சலுகைகளை கேட்டு பெற்று தொழில் தொடங்க முன்வருவார்கள்.

மேலும் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் குழுவினர் பெரும் தொழில் அதிபர்களை நேரில் சந்தித்து உரையாடி முதலீடுகளை கொண்டு வந்தனர். இதன் மூலம் பல லட்சம் கோடி முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்தது. கடந்த கால அதிமுக ஆட்சியிலும் இப்படித்தான் இருந்தது. நிலைமை இப்படி இருக்கும் போது, தமிழக தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா கோட் அணிந்து கொண்டு த.வெ.க.வின் முக்கிய ஆயுதமாக கருதப்படும் ரீல்ஸ் போட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது அரசு நிர்வாகத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

### இன்றைய தொழில்துறை அமைச்சரின் ரீல்ஸ் பதிவு!

அந்த ரீல்ஸ் பதிவில் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா பேசியிருப்பதாவது: ‘தமிழகம் எதிர்காலத்திற்காக காத்திருக்கவில்லை, அதை நாங்கள் கட்டமைக்கிறோம். கோப்புகள் மற்றும் ஒப்புதல்களுக்காக நீண்ட காலம் காத்திருக்க வைக்கும் அரசை யாரும் விரும்புவதில்லை. அதனை சரிசெய்யவே முதல்வர் விஜய் என்னை நியமித்துள்ளார்.

நமது அரசு 21 நாட்களில் விரைவான அனுமதி மற்றும் ஒற்றைச் சாளர ஒப்புதல்களுக்கு உறுதியளிக்கிறது. பிரச்சினைகளை என்னிடமும், முதல்வரிடமும் நேரடியாக கொண்டு செல்லலாம் என்று உறுதியளிக்கிறோம். ஏஐ நகரங்கள் முதல் பசுமை ஹைட்ரஜன், மேம்பட்ட உற்பத்தி மற்றும் விண்வெளிப் பொருளாதாரம் என பல புதுமைகளை செயல்படுத்தும் ஒரு சூழலை எங்கள் அரசு உருவாக்குகிறது. முதல்வர் விஜய்யின் தொலைநோக்கு தலைமையின் கீழ்,



ரீல்ஸ்விடும் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா!

தமிழகத்தை இந்தியாவின் முதலீடு மற்றும் கண்டு பிடிப்புகளின் மையமாக மாற்ற உறுதி பூண்டுள்ளோம்.

எதிர்காலம் இங்கே உள்ளது. எனவே தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். தேர்தல் பிரசாரங்களில் ரீல்ஸ் மூலமாக கவனம் ஈர்த்த கீர்த்தனா, இப்போது தொழில் துறை அமைச்சரான பின்னரும் முதலீடுகளை ஈர்க்க அதே ரீல்ஸ் வழிமுறைகளை பயன்படுத்துவது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் அமைச்சர் கீர்த்தனாவை வறுத்தெடுத்து வருகின்றனர்.

### விளம்பர மாடல் போல் அமைச்சர்!

நெட்டிசன் ஒருவர் தனது பதிவில், “தமிழக தொழில் துறை அமைச்சர் இன்ஸ்டாவில் தமிழ்நாட்டில் முதலீடு ஈர்க்க விளம்பரம் செய்கிறார். ஏதோ பிளாட் விற்கிற நிறுவனங்களுக்கு ஒரு விளம்பர மாடல் பேசுவது போல் பேசுகிறார் அமைச்சர். நடிகர் விஜய் அமைச்சரவை எந்த அளவுக்கு கேவலமாக மாறி வருகிறது என்பதற்கு இந்த வீடியோ ஒரு உதாரணம்.. மற்ற மாநிலங்கள் மற்றும் தொழில் துறை சார்ந்த உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்கள் கேவலமாக பார்த்து சிரிக்கும் வகையில் நடவடிக்கை உள்ளது காலக் கொடுமை...” என்று கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## தேர்தல் அறிக்கையில் கூறியபடி, பயிர்க்கடன்களைத் தள்ளுபடி செய்யாமல் ஏமாற்றுவதா?

# த.வெ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணித்தனர்!

அரியலூர், மே 31–

விவசாய கடன் தள்ளுபடி தொடர்பான த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். அரியலூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமி தலைமையில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. அப்போது, த.வெ.க. அரசு தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றா மல் மோசடியாக கூட்டுறவு கடன் தள்ளுபடி அறிவிப்பு அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்க்கு விவசாயிகள் தங்களது கண்டனத்தை பதிவு செய்தனர். பின்னர் அனைத்து விவசாயிகளும் கூட்டத்தில் பங்கேற்காமல் புறக்கணிப்பு செய்து, த.வெ.க.அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

### திருவாரூர்

விவசாயிகளின் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் ஒன்றிய அரசு உர விலையை உயர்த்தியதற்கு விவசாயிகள் கண்டனம் நெற்றியில் நாமம் இட்டு, வாயில் கருப்பு துணி கட்டி விவசாயிகள் நூதன ஆர்ப்பாட்டம் இதேபோல் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் மோகனச்சந்திரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பயிர்க் கடன்கள் அனைத்தையும் முற்றிலுமாக தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், உர விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்தும், விவசாயிகள் நாமம் இட்டு வாயில் கருப்பு துணியை கட்டி நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் குறைதீர் கூட்டத்தை விவசாயிகள் புறக்கணித்து ஆட்சியர் அலுவலக வளாகம் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஒரு விவசாயி தரையில் படுத்து உருண்டு தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

### வேலூர்

விவசாயத்தை காப்பாற்றக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் தரையில் புரண்டு, மார்பில் அடித்துக் கொண்டு விவசாயிகள் போராட்டம் வேலூரில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் துவங்கியவுடன் அனைத்து விவசாயிகள் சங்கமும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள விவசாயிகளின் பயிர் கடன் தள்ளுபடி பெருத்த ஏமாற்றம் அளிப்பதாக கூறி வெளிநடப்பு செய்தனர். பின்னர், ஆட்சியர் அலுவலகம் முன்பாக விவசாயிகள் தரையில் புரண்டு மார்பில் அடித்துகொண்டு விவசாயத்தை காப்பாற்றக் கோரி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சேலம்

முதலமைச்சர் விஜய் விவசாயிகளின் நம்பிக்கையை இழந்து விட்டார் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடுவோம்

### தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் எச்சரிக்கை

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்றும், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி பயிர் கடன் தள்ளுபடி செய்யாவிட்டால் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் தங்கராஜ், 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உள்ள பயிர் கடனில் வெறும் 2000 கோடி ரூபாய் மட்டுமே தள்ளுபடி செய்வதற்கான வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார். மேலும், ஜூன் 12ம் தேதி தமிழக டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட முடியாத சூழ்நிலை உள்ளது, கர்நாடக அரசிடம் பேசி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை கேட்டு பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.










பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகத்தில் விவசாயிகள் போராட்டம்

# திராவிடத்தால் வாழ்கிறோம்

1214

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி


குமரன்தாஸ்

63

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# 'பாடாத தேனீக்கள்' - குடும்பக் கதையில், கலைஞரின் திரைக்காவியம்..!





கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய புகழ்பெற்ற சமூக அரசியல் திரைப்படங்கள் போலவே, மிகச்சிறந்த குடும்பத் திரைப் படங்களும் உள்ளன. அவ்வாறு கலைஞரால் திரைக்கதை வசனம் எழுதப்பட்டு, 1988-ஆம் ஆண்டு 'முரசொலி' செல்வம் தயாரிப்பில், வி.எம்.சி.ஹனீபாவின் கதை மற்றும் இயக்கத்தில் வந்த குடும்பத் திரைக்காவியம்தான் 'பாடாத தேனீக்கள்' ஆகும்.

இப்படத்தில் சிவக்குமார், ராதிகா, ஸ்ரீப்ரியா, சந்திரசேகர், எஸ்.எஸ்.சந்திரன், மனோரமா, வசந்த், மாதுரி, ரவிச்சந்திரன், வினுசக்ரவர்த்தி, வடிவுக்கரசி, விஜயன், வி.எம்.சி.ஹனீபா எனப் பெரும் பட்டாளமே நடித்துள்ளனர்.

இப்படம், ஒரு மனிதன் இளம்பருவத்தில் செய்த ஒழுக்கக்கேடான செயல்களும், ஒழுக்கக் கேடானவர்களுடனான நட்பும் எவ்வாறு அவனது குடும்ப வாழ்க்கையைச் சீரழித்துவிடுகின்றன என்பதை எடுத்துச் சொல்லும் வகையில், மிக அருமையான திரைக்கதையையும் வசனத்தையும் கொண்டிருக்கிறது.

### படத்தின் கதை

இன்ஜினீயர் சத்தியமூர்த்தியும் (சிவக்குமார்) டாக்டர் சாரதாவும் (ராதிகா) பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி, காதல் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு மஞ்சு என்ற குழந்தையும் உள்ளது.

அவர்களது பக்கத்து வீட்டில் ஆரோக்கியசாமி (எஸ்.எஸ்.சந்திரன்) காமாட்சி (மனோரமா) தம்பதியினர் வசிக்கின்றனர். காமாட்சி பார்ப்பனப்பெண் என்பதால், ஆரோக்கியசாமி அசைவ உணவுகளை வீட்டுக்குள் கொண்டுவந்து சாப்பிடக் கூடாது என்று அவருடன் சண்டை போடுகிறாள்.

அவர்களது சண்டையை சத்தியும் சாரதாவுமே தீர்த்துவைக்கின்றனர். அந்தளவுக்கு சத்தியும் சாரதாவும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். ஆனால், ஒரு நாள் சத்தியின் துபாய் நண்பன் பிரேம்நாத் (சந்திரசேகர்) போன் செய்து, தன்னைக் காண்பதற்கு, தான் தங்கியுள்ள ஹோட்டல் அறைக்கு வருமாறு சத்தியை அழைக்கிறான். அங்கு பிரேம்நாத் ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருக்கிறான். சத்தி வந்தவுடன் அப்பெண்ணை குளியலறையில் மறைத்து வைத்துவிட்டு, தன் நண்பன் சத்தியமூர்த்தியுடன் பேசிக்கொண்டிருக்கிறான்.



அப்போது பிரேம்நாத்தின் மனைவி போனில் அழைத்து, உடனே வரச் சொல்கிறாள். சத்தியமூர்த்தியை அறையில் இருக்கச் சொல்லிவிட்டு, மனைவியைப் பார்த்து வர பிரேம்நாத் வெளியே செல்கிறான். அப்போது, போலீஸார் வந்து அறையைச் சோதனை செய்கின்றனர். குளியலறையில் இருந்த பெண்ணுடன் சத்தியமூர்த்தி விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கைதுசெய்யப் பட்டு, அழைத்துச் செல்லப் படுகிறான்.



இதனைக் காணும் சாரதா மனம் வெறுத்துப்போய், தன் குழந்தையுடன் பெற்றோர் வீட்டுக்கு வந்துவிடுகிறாள். சத்தியமூர்த்தி கைதான செய்தி நாளிதழில் வந்து, சாரதாவின் தங்கை சாந்தியின் திருமணம் தடைபடுகிறது. இதனால் கோபம் கொள்ளும் சாரதாவின் தகப்பனார் (வினுசக்ரவர்த்தி) வக்கீல் புவனா (ஸ்ரீப்ரியா) மூலமாக நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி, சாரதாவுக்கு விவாகரத்து பெற்றுவிடுகிறார்.

ஏற்கெனவே, தனது தங்கை புனிதாவின் (மாதுரி) சாவுக்கு சத்தியமூர்த்திதான் காரணம் எனத் தவறாக நினைத்து, அவனைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கும் புவனாவுக்கும் அவளது தந்தை குருமூர்த்திக்கும் (ரவிச்சந்திரன்) இது ஒரு நல்வாய்ப்பாக ஆகிவிடுகிறது. இப்போது, மனைவியைப் பிரிந்து தனியாக வாழும் சத்தியமூர்த்தியை அவன் கட்டுமானப் பணி செய்யும் கட்டடத்திற்கு வரச் செய்து, அங்கு வைத்துக் கொலைசெய்ய சுடலை (வி.எம்.சி.ஹனீபா) எனும் ஒரு ரவுடியை குருமூர்த்தி ஏற்பாடு செய்கிறார்.

இந்த நேரத்தில் துபாயிலிருந்து பிரேம்நாத் திரும்பி வந்து, தன் நண்பன் சத்தியமூர்த்தியையும் அவனது குடும்பத்தையும் காண, சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு வருகிறான். வீட்டில் யாரும் இல்லாதது கண்டு ஆரோக்கிய சாமியிடம் விசாரிக்கிறான். ஆரோக்கிய சாமி நடந்தவற்றை எல்லாம் எடுத்துக் கூறுகிறார். தன்னால்தான் தன் நண்பனின் வாழ்க்கை சீரழிந்து போனது என்பதை உணரும் பிரேம்நாத், சாரதாவைத் தேடி வக்கீல் புவனா வீட்டிற்குப் போய், நடந்த உண்மைகளை எடுத்துச் சொல்கிறான்.

மேலும், புவனாவின் தங்கை புனிதாவை ஏமாற்றி கர்ப்பமாக்கியதுடன், அவள் தற்கொலை செய்துகொள்ளக் காரணமானவன் சத்தியமூர்த்தி அல்ல சத்தியநாராயணன் (வசந்த்) என்கிற தங்களுடன் படித்த நண்பன்தான் என்ற உண்மையையும் எடுத்துச் சொல்கிறான். உண்மைகளை அறிந்து வருத்தப்படும் புவனா, சத்தியமூர்த்தியை ரவுடி சுடலையிடம் இருந்து காப்பாற்றுவதற்காக அனைவரையும் அழைத்துக் கொண்டு கட்டுமானப் பணி நடக்கும் இடத்திற்குச் செல்கிறாள்.

அதற்குள் சத்தியை சுடலை கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்துகிறான்.

இருவருக்கும் நடைபெறும் சண்டையில் ரவுடி சுடலை கட்டட உச்சியில் இருந்து தவறி கீழே விழுந்து சாகிறான். அங்கு வரும் சாரதாவும் குழந்தை மஞ்சுவும் சத்தியமூர்த்தியுடன் சேர்கின்றனர். பிரேம்நாத், ஆரோக்கிய சாமி, புவனா ஆகியோர் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அத்துடன் படம் நிறைவடைகிறது. படத்தில் அரசியல் வசனங்கள் குறைவு என்றாலும், குடும்பக் கதையிலும் கலைஞரின் எழுத்துகள் காலத்துக்கு ஏற்ப கவனம் பெற்றன.

> "படத்தில் அரசியல் வசனங்கள் குறைவு என்றாலும், குடும்பக் கதையிலும் கலைஞரின் எழுத்துகள் காலத்துக்கு ஏற்ப கவனம் பெற்றன."

...காட்சி விரியும்

## தலைதூக்கும் சனாதனம்! எச்சரிக்கை!

" 'கோயில் கூடாது என்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது' என்று 'பராசக்தி' திரைப்படத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய 'எச்சரிக்கை' வசனம் இன்றைக்கு திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகரின் செயலாலும் அமைச்சரின் செயலாலும் மீண்டும் மெய்ப்பட்டுள்ளது." என்று விமர்சனம் செய்துள்ளார், எழுத்தாளர் கௌதம் ராஜ்.

"இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், திருச்செந்தூர் கோயிலில் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, அவரை அமைச்சர் என்று அறியாத அர்ச்சகர்கள், தரிசனம் செய்ய தலைக்கு ரூ.1,000 என உடன் வந்த மூவருடன் சேர்த்து ரூ.4,000-தை GPAY மூலம் பெற்றுள்ளனர். கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையே இருக்கும் அர்ச்சகர்களுக்குத்தான் தொழில்நுட்பத்தின்மீது எவ்வளவு நம்பிக்கை என்று பாருங்கள்.

நவீன முறையில் பணம் வாங்கிய அர்ச்சகர்கள் அமைச்சரிடம் சிக்கிக்கொண்ட பிறகு, அவர்களை மன்னிப்புக் கடிதம் எழுதச் சொல்லி வழங்கிய விநோத தண்டனை, ஊழலை இவர்கள் மனுதர்மத்தின் அடிப்படையில்தான் ஒழிக்க முயல்கிறார்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது. இதே அமைச்சர், ஒரு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு பணிபுரியும் தூய்மைப் பணியாளர், நோயாளியைச் சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிச்செல்ல ரூ.10 கேட்டதற்காக அவரைப் பணியிலிருந்து நீக்கினார்.

பிற்படுத்தப்பட்ட - பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் பதவி நீக்கம், பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் விளக்கக் கடிதம் போதும் என்பது, இத்தனை ஆண்டுக்காலமாகத் தமிழ்நாட்டில் நாம் பேணி வந்த சமூக நீதி கொள்கைக்கு விரோதமானது. பெரியாரையும் அம்பேத்கரையும் கொள்கைத் தலைவர் என்று சொல்லி - அண்ணல் அம்பேத்கர் இயற்றிய சட்டத்தின்மீது முழு நம்பிக்கை கொண்டுள்ளதாக உறுதியேற்றுக்கொண்ட ஒரு அமைச்சர், மனுதர்மத்தின்படி சாதிக்கொரு நீதியை வகுத்திருப்பது ஏன் என்று கேள்வி எழுகிறது. அந்த அர்ச்சகர்கள்மீது எடுக்கப்படும் நடவடிக்கையாவது மனுதர்மப்படி இல்லாமல் அரசமைப்புச் சட்டத்தின்படி இருக்க வேண்டும். கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது" என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



மு.முருகேஷ்




### மனத்தில் பதிந்த அழியா வாழ்த்து...

முத்தமிழறிஞர் கலைஞரின் 90-வது பிறந்தநாளை, 90 கவிஞர்களுடன் கொண்டாடும் முன்னெடுப்பை, 2013-ஆம் ஆண்டில் கவிப்பேரரசு வைரமுத்து முன்னெடுத்திருந்தார். அதில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. ஒவ்வொரு கவிஞராக கவிப்பேரரசு அழைத்து, கலைஞரிடம் அறிமுகம் செய்தார்.

என்னைக் கலைஞரிடம் அறிமுகம் செய்யும்போது, "கவிஞரின் இணையரும் ஒரு கவிஞர்..." என்றார். எனது நூல்களைக் கைகளில் வாங்கி ஒரு பார்வை பார்த்த கலைஞர், "இலக்கிய இணையர்கள்" என்றபடி முகம் மலரப் புன்னகைத்தார். அந்தப் புன்னகையே எனக்கான வாழ்த்தாக, என் மனத்தில் என்றென்றும் அழியாமல் பதிந்திருக்கிறது.

- கவிஞர் மு.முருகேஷ்,
பத்திரிகையாளர், வந்தவாசி, திருவண்ணாமலை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நறுக்கு
### கலங்கச் செய்த பேச்சு!

**23, 24.10.1948** அன்று ஈரோட்டில், 'மாகாண திராவிடர் கழக 19-வது தனி மாநாட்டை' நடத்தினார் பெரியார். இதுதான் 'அஞ்சா நெஞ்சன்' அழகிரி பங்கேற்ற கடைசி மாநாடு. "தோழர்களே, இந்த மாநாட்டிற்குப் பிறகு சிறை செல்ல நேரிடும் என்றெல்லாம் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில், என் உடல் நிலையில் இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவருக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே இன்று வந்தேன்" என்று தழுதழுத்த குரலில் அவர் பேசியது எல்லோரையும் கலங்கச் செய்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900